In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam

CC.24/2025

PW-1

Date :-09.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | திருமதி.புனிதா | Caste | |
| க/பெ. | திரு.நவனீதன் | Calling | வீட்டுக்குடிதனம் |
| Village | மேலவாளாடி | Religion | |
| Taluk | இலால்குடி | Age | 42 /2025 |

அரசு தரப்பில் முதல் விசாரணை-

நான் தற்போது இலால்குடி மேலவாளாடியில் வசித்து வந்து வீட்டுக்குடிதனம் நடத்தி வருகிறேன் . சுமார் 1 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மேலவாளாடியில் இருந்து சத்திரம் செல்வதற்காக அரசு பேருந்தில் வந்துக்கொண்டிருந்தேன். அப்போது நான் கட்டை பையில் மிக்சி ஜார் மற்றும் ப ண பர்ஸை வைத்து வந்துக்கொண்டிருந்தேன் . அப்போது திருவானைக்கோவில் பாலத்தில் பேருந்து வந்துக்கொண்டிருந்தபோது அப்போது நான் எனது கட்டை பையை பார்த்தபோது எனது கட்டை பை கிழிந்து இருந்தது பர்ஸ் திருடுபோய் இருந்தது. பணம் ரூ.700/- மற்றும் ரேஷன் கார்டு, பான் கார்டு ஆகியவை பர்சில் இருந்தது பிறகு பேருந்தை அந்த இடத்தில் நிறுத்திவிட்டு நான் இறங்கி வந்து திருவானைக்கோவில் பஸ்டாப் அருகே வந்தபோது ஒரு அம்மா சுமார் 60 வயது இருக்கும் பிறகு நான் அந்தஅம்மா பணத்தை எண்னிக்கொண்டு இருக்கும்போது நான் பார்த்தேன் . அந்தபணத்தில் எனது பெயர் ஏற்கனவே எழுதிவைத்திருந்ததால் அந்த பணம் என்னுடையது என்று எனக்கு தெரியவந்தது . அந்த அம்மாவை பிடித்து விசாரணை செய்தபோது அந்த அம்மா முதலில் திருடியதை ஒத்துக்கொள்ளவில்லை பின்னர் காவல் நிலையத்திற்கு அழைத்துவந்து போலீஸ்க்கு தகவல் கொடுத்தேன். போலீசில் புகார் கொடுத்தேன். அந்த புகார் நான் கொடுத்ததுதான் . அந்த புகார் அ .சா.ஆ-1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது. பணம் போலீசாரிடம் போலீசார் எதிரியுடன் பணத்தை ஒப்படைக்கும்போது போலீசார் தயார் செய்த படிவம் -91-ல் சாட்சியாக கையொப்பம் செய்தேன் . அந்த படிவம் -91 ல் சாட்சி

AVA Q

**கையொப்பம் அ.சா..ஆ–2 ஆககுறியிடுசெய்யப்படுகிறது. மேற்படி பணம் ரூ.700/– நீதிமன்றத்தில் இருந்து பெறவில்லை. போலீஸ் விசாரணையில் எதிரியின் பெயர் லெட்சுமி என்று தெரிந்துக்கொண்டேன் . போலீசார் விசாரணையில் எதிரி தனது ஊரை மாற்றி, மாற்றி கூறினார். இன்று எதிரி ஆஜர் இல்லை. எதிரியை எனக்கு அடையாளம் தெரியும்.**

**(எதிரியை ஆஜர் செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது)**

**Sd/–xxxx**

Taken down by me in open court , read over
to her and accepted by her as correct and
made her signature

**Sd/–xxxx**

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.